## நகர்மன்ற சாதாரண கூட்டப்பொருள்

2018ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24.08.2018 தேதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள சாதாரண கூட்டத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் 1**

நகராட்சி ஆணையர் அவர்களது ஜீலை 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 358** **நாள் 24.08.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 2**

நகராட்சி பொறியாளர் அவர்களது ஜீலை 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 359** **நாள் 24.08.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 3**

திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் நகராட்சியில் 2002 ஆம் வருடத்தில் பல்லுயிர் பன்மியச் சட்டம் (மத்திய சட்டம்) 2004ம் வருடத்திய பல்லுயிர் பன்மிய விதிகள் மற்றும் 2017 ஆம் வருடத்திய தமிழ்நாடு பல்லுயிர் பன்மிய விதிகள் ஆகியவற்றில் தொகுத்தளிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு இனங்க இந்நகராட்சியில் தனித்துவமிக்க தாவரங்கள் மற்றும் பல்லுயிர்கள் ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக பின்வரும் உறுப்பினர்களை கொண்ட பல்லுயிர் பன்மிய மேலாண்மைக்குழு தோற்றுவிக்கப்பட்டமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | திரு.பி. முருகையன்<br>தொண்டு நிறுவன மேலாளர்,<br>மனோலயம் தொண்டு நிறுவனம்<br>பணங்காட்டாங்குடி, கூத்தாநல்லூர் | குழுத்தலைவர் |
| 2 | திரு. ராதாகிருஷ்ணன்<br>வனவிலங்கு அலுவலர்<br>மாவட்ட வனவிலங்கு அலுவலகம்<br>திருவாரூர் | செயலாளர் |
| 3 | திருமதி.சுமிதா<br>முத்துமாரியம்மன் சுய உதவிக்குழு<br>வா.உ.சி.காலனி கோரையாறு | உறுப்பினர் |
| 4 | திருமதி.முபாரக் நிஷா<br>சந்தனமுல்லை சுயஉதவிக்குழு<br>அண்ணாகாலனி | உறுப்பினர் |
| 5 | திருமதி.ஜோஸ்பின்ராணி<br>செவ்வந்தி சுயஉதவிக்குழு<br>இராஜகோபாலசாமிதோட்டம் தெரு | உறுப்பினர் |
| 6 | திரு.சி.மோகன் விவசாயி<br>இராஜகோபாலசாமி தோட்டம் தெரு | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 7 | திரு.ரெ.வீரமணி<br>கீழத்தெரு மேலபணங்காட்டாங்குடி<br>கூத்தாநல்லூர் | உறுப்பினர் |
| | **சிறப்பு அழைப்பாளர்கள்** | |
| 1 | திரு. எம்.பாலசுப்பிரமணியன், தலைமை ஆசிரியர், ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கூத்தாநல்லூர் | |
| 2 | திருமதி.எஸ்.செல்வி வட்டாட்சியர் கூத்தாநல்லூர் தாலுக்கா | |
| 3 | திரு. Dr,B. ஜெஹபர்சாதிக், முதன்மை மருத்துவ அலுவலர், கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனை, கூத்தாநல்லூர் | |
| 4 | திரு.. Dr. பிரவீன், கால்நடை மருத்துவர், கூத்தாநல்லூர் கால்நடை மருத்துவமனை மரக்கடை லெட்சுமாங்குடி | |
| 5 | திருமதி. ஆர். சாவித்திரி, தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மரக்கடை, கூத்தாநல்லூர் | |
| 6 | திரு.கார்த்தி, துணை காவல் ஆய்வாளர், கூத்தாநல்லூர் நகர காவல் நிலையம்,. கூத்தாநல்லூர் | |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண் 1192/2018/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 360** **நாள் 24.08.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 4**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 56754/94/எச்1 நாள் 14.08.1995ன்படி இந்நகராட்சியின் நிரந்தரமாக இரவு காவலர் பணியிடம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் இரவு காவலர் பணியிடத்தில் 2008–ல் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வந்த திரு.வீ.செல்வராஜ் என்பவரை 03.05.2013 முற்பகல் முதல் அலுவலக உதவியாளராக பணி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. 03.05.2013 முதல் இரவு காவலர் பணியிடம் பூர்த்தி செய்யப்படாமல் இருந்து வருகிறது. இரவு காவலர் பணியிடத்தில் உள்ள பணியாளர்தான் கூடுதல் பணியாக தினசரி இரவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி, மற்றும் பம்பு ரூம் பணியினை பார்த்து வந்துள்ளார். தற்போது இரவு காவலர் பணியிடம் காலியாக உள்ளதால் மேற்கண்ட பணிக்காக ஒரு துப்புரவு பணியாளரை தற்காலிகமாக பார்த்து வர உத்தரவிடப்பட்டு மேற்கண்டவாறு பணிபார்த்து வருகிறார். மேலும் இரவு காவலர் பணியிடம் அத்தியாவசியமாக உள்ளது. எனவே இந்நகராட்சியின் நிர்வாக நலன் கருதி குடிநீர் பணிகள் பாதிக்காமல் இருப்பதற்காகவும், இரவு காவலர் பணி நியமனம் செய்து கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 361** **நாள் 24.08.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 5**

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 16.07.2018ந் தேதிய ந.க.எண். 1261/செ.ம.தொ.அ/2017ம் தேதிய கடிதத்தின்படி தமிழக அரசின் 2ம் ஆண்டு சாதனை சிறப்பு மலரில் கூத்தாநல்லூர் நகராட்சியில் நடைபெற்றுவரும் வளர்ச்சி பணிகளை சிறிய அளவில் பிரசுரம் செய்யவும் அதற்கான விளம்பரத் தொகையினை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1142/2018/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 362** **நாள் 24.08.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 6

இந்நகராட்சி பொதுபிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் ஈப்பு வாகனம் (TN 50 U 2453) கியர் பாக்ஸில் உள்ள கிளட்ச் பிளேட், கவர் அசெம்பிளி, ரிலீஸ் பேரிங் பழுதாகி இயங்காமல் உள்ளதை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 18.07.2018 தேதி அன்று கோரப்பட்ட விலைப்புள்ளியில் மூன்று விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | ஏ. ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | 11,885 |
| 2 | கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | 12,350 |
| 3 | ஸ்ரீ ராஜகோபாலசாமி ஆட்டோ கேரேஜ் மன்னார்குடி | 12,.800 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள ஏ.ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளி குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள ஏ.ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்

(ந.க.எண். 1021/2018/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 363** **நாள் 24.08.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 7

இந்நகராட்சிக்குட்பட்ட 23வது வார்டு நத்தர்கனி ரோடு சாலை, 24வது வார்டு அக்கரை புதுத்தெருசாலை, 17வது வார்டு பெரிய தெரு சாலை ஆகிய மூன்று தெருக்களிலும் தினசரி வழங்கப்படும் குடிநீரின் அளவு குறைந்து வருவதால், மேற்படி இடங்களில் குடிநீர் குழாயினை பிரித்து பார்க்கப்பட்டதில் மெயின் குழாயிலிருந்து பிரிவு குழாயிற்கு செல்லும் இணைப்பினை 1 ¼ பைப் மூலம் கொடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது குழாய் இணைப்புகள் கூடுதலாக கொடுக்கப்பட்டு வருவதால் 1 ¼ பைப் மூலம் வரும் குடிநீர் போதுமானதாக இல்லை என்பதால் அதற்கு பதிலாக 5X3 பைப் இணைப்பு கொடுத்திடவும், சீரான குடிநீர் வழங்கிடவும், தேவையான உதிரிபாகங்கள் வாங்குவதற்கும், மேற்படி பணியினை குடிநீர் அவசர அவசியம் கருதி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.வீ.எழில்மாறன் என்பவர் மூலமாக பணியினை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.8,500/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.வீ.எழில்மாறன் என்பவர் மூலமாக பணி மேற்கொள்ள உள்ளதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 1187/2018/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 364** **நாள் 24.08.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 8

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள இந்தியா மார்க் -II அடிபம்புகள் 144 எண்ணிக்கைகள் இயங்கி வந்தது. அதில் 8 எண்ணம் அடிபம்புகள் நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது. மீதமுள்ள 136 எண்ணம் கொண்ட அடிபம்புகளில் 30 எண்ணம் அடிபம்புகள் கம்ப்ரசர் மூலம் பழுதுகள் நீக்கம் செய்து GI பைப், மற்றும் உதிரிபாகங்கள் கொண்டு சரி செய்யப்பட்டு இயங்கி வருகிறது. எனவே மீதமுள்ள 106 அடி பம்புகளில் சில உதிரிபாகங்களான சிலிண்டர், கைப்பிடி, Connection Rod, Handpump set, இல்லாமல் உள்ளது. எனவே மேற்படி உதிரிபாகங்கள் வாங்கி பயன்படுத்த ஆகும் மதிப்பீடு ரூ.1,20,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

(ந.க.எண். 1146/2018/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 365** **நாள் 24.08.2018**
**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 9

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள 40 எண்ணிக்கை புஷ்கார்டில் 20 எண்ணிக்கை வாகனத்தின் சக்கரங்கள் பழுதடைந்தும் புஷ்காட் வாகனங்களின் பக்கவாட்டு தகரங்கள் பழுது ஏற்பட்டுள்ளதாலும் மற்ற இதர பழுதுகளாலும் புஷ்காட் வாகனங்களை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேலும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016—ன்படி அனைத்து வீடுகளிலும் குப்பைகளை தரம் பிரித்து வாங்கப்பட வேண்டும். தற்போது உள்ள வாகனத்தினை கொண்டு 24 வார்டுகளிலும் குப்பைகள் சேகரம் செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி 20 எண்ணிக்கை புஷ்காட் பழுதுபார்க்கவும் வாகனத்திற்கு தேவையான 80 எண்ணிக்கை பச்சை மற்றும் நீலம் குப்பை தொட்டிகள் வாங்கப்படவேண்டும். எனவே அதற்கான உத்தேச செலவினம் ரூ,2,30,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்(ந.க.எண். 323/2018/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 366** **நாள் 24.08.2018**
**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 10

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 21.05.2018 தேதிய ந.க.எண். 12503/2018/ஆர்1 சுற்றறிக்கையின்படி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 1244 மற்றும் வர்த்தகம், தொழில் மற்றும் வேலை வாய்ப்பு ஆகியவற்றிற்கு தொழில்வரி வசூல் செய்யும் விதிகள் 1999 விதி 16ன்படி இந்நகராட்சியில் ஏற்கனவே வசூலிக்கப்பட்டு வரும் தொழில்வரியின் 01.10.2018 முதல் (2018—19ம் இரண்டாமம் அரையாண்டு முதல்) 25% உயர்வு செய்வதற்கு பொதுமக்களுக்கு தெரிவித்து ஆட்சேபனை ஏதுமிருப்பின் பெறுவதற்கு தினசரி நாளிதழ் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. தொழில் வரி உயர்வு தொடர்பாக பொது மக்களிடமிருந்து ஆட்சேபனை ஏதும் பெறப்படாததால் 01.10.2018 முதல் 25% உயர்த்தப்பட்ட தொழில்வரி இந்நகராட்சியில் வசூல் செய்யப்படும் என பொதுமக்களுக்கு தெரிவிக்க தினத்தந்தி நாளிதழ் மூலம் 01.08.2018ல் விளம்பரம் செய்யப்பட்டதற்கும், மேலும் தொழில்வரி 01.10.2018 முதல் 25% உயர்வு செய்யப்பட்டதை திருவாரூர் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கும் உத்தேச செலவின தொகை ரூ.15000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதிக்கலாம்

(ந.க.எண். 654/2018/அ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 367** **நாள் 24.08.2018**
**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 11

01.04.2018 முதல் (2018–2019 முதல் அரையாண்டு) சொத்துவரி சீராய்வு மேற்கொள்வது தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறை அரசாணை எண் 76 நாள் 26.07.2018ல் அரசாணை எண் 73ல் வரிசை எண் 2ல் உள்ள வாடகை குடியிருப்பு கட்டிடங்களை 100% இருந்து 50% மிகாமல் வரி உயர்வு செய்ய திருத்தம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அரசாணை (G.O.(Ms).No.76 நாள் 26.07.2018) மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 1105/2018/அ1)

நகர் மன்ற தீர்மானம் எண் :- 368 நாள் 24.08.2018

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 12

01.04.2018 முதல் (2018–2019 முதல் அரையாண்டு) சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள வரி உயர்வு செய்ய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 73 நாள் 19.07.2018ன்படி வெளியிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | சொந்த குடியிருப்பு கட்டிடங்கள் | 50% மிகாமல் |
| 2 | வாடகை குடியிருப்பு கட்டிடங்கள் | 100% மிகாமல் |
| 3 | குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு | 100% மிகாமல் |

மேற்கண்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (ந.க.எண். 1105/2018/அ1)

நகர் மன்ற தீர்மானம் எண் :- 369 நாள் 24.08.2018

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 13

கூத்தாநல்லூர் நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட 38 துப்புரவு பணியாளர் பணியிடங்களில் தற்போது 26 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். 12 துப்புரவு பணியாளர்கள் பணியிடங்கள் காலிப்பணியிடமாக இருந்து வருகிறது. இந்நகராட்சியில் பணிபுரிந்து பணியிடை காலத்தில் இறந்துவிட்ட திரு.சி.பக்கிரிசாமி துப்புரவு பணியாளரின் வாரிசுதாரராகிய திரு. கண்ணன் த./பெபக்கிரிசாமி என்பவருக்கு கருணை அடிப்படையில் துவாக்குடி நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார். ஆணையர், துவாக்குடி நகராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண். 440/எச்1/2017 நாள் 23.07.2018ன்படி திரு. கண்ணன் த/பெ பக்கிரிசாமி துப்புரவு பணியாளர் குடும்ப சூழ்நிலை காரணமாகவும் மற்றும் உடல் நலம் சரியில்லாத காரணத்தாலும் கூத்தாநல்லூர் நகராட்சியில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணியிடத்திற்கு மாற்றம் செய்திட கருத்துரு கோரியுள்ளார். எனவே ஆணையர், துவாக்குடி நகராட்சி அவர்களின் கடிதத்தில் கேட்டுக் கொண்டதற்கினங்க இந்நகராட்சியில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணியிடத்தில் திரு கண்ணன் த/பெ பக்கிரிசாமி துப்புரவு பணியாளரை நியமனம் செய்திட தடையின்மைச் சான்று வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. இந்நகராட்சியில் துப்புரவு பணியாளர் பணியிடம் காலியாக உள்ளதால் திரு.கண்ணன் த/பெ பக்கிரிசாமி என்ற துப்புரவு பணியாளரை இந்நகராட்சிக்கு மாற்றம் செய்வதற்கு தடையின்மைச் சான்று வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1144/2018/சி1)

நகர் மன்ற தீர்மானம் எண் :- 370 நாள் 24.08.2018

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 14

இந்நகராட்சிக்குட்பட்ட அலுவலக நீர் தேக்க தொட்டியிலிருந்து 3வது வார்டு, 4, 5, 6, 7, 8, 9 மற்றும் 18வது வார்டுகளுக்கு குடிநீர் உபயோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது நகராட்சியில் குடிநீர் இணைப்பு கூடுதல் ஆனதால் 5வது வார்டு கீழபணங்காட்டாங்குடியில் தண்ணீரின் அளவு குறைந்து வருகின்றது. குடிநீரின் அவசர அவசியம் கருதி கீழபணங்காட்டாங்குடியில் தற்காலிகமாக துண்டிப்பு செய்துள்ள போர்வெல் மற்றும் மின் இணைப்பினை சீர் செய்து புதிதாக 2 HP Submersible Motor, HDPE Hose, Cable மற்றும் உதிரிபாகங்கள் கொண்டு இணைப்பினை அமைத்திட ஆகும் மதிப்பீடு ரூ.47,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 1353/2018/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 371** **நாள் 24.08.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 15**

இந்நகராட்சி பொது சுகாதாரபிரிவிற்கு தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கவும், டெங்கு தடுப்பு பணிகளுக்கும் குப்பை தொட்டிகள் உள்ள இடங்களில் போடவும், குப்பை எடுக்கப்படும் இடங்களில் தெளிக்கவும், ஊர் முக்கிய திருவிழாக்கள் மற்றும் மதசார்பு பண்டிகைகள் போன்ற பொது சுகாதார முக்கிய பணிகளுக்கும் மற்றும் இதர அலுவலக பணிகளுக்கும் நீர்த்த சுண்ணாம்பு 5000 கிலோவும் பிளிச்சீங் பவுடர் 1000 கிலோவும் தேவைப்படுகிறது. இருப்பில் மேற்படி பொருள்கள் இல்லாததால் மேற்படி பொருட்களை ஒப்பந்தபுள்ளி பெற்று வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/ இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1310/2018/அ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 372** **நாள் 24.08.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 16**

இந்நகராட்சிக்கு 2018—2019ம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள் படிவங்கள் பதிவேடுகள் மற்றும் கணிணி மையத்திற்கு தேவையான பொருட்கள் வாங்கி வழங்கவும் அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1310/2018/அ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 373** **நாள் 24.08.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 17**

இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டுகளில் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை கொண்டு உரமாக்கிட ரேடியோ பார்க்கில் புதிதாக உரம் தயாரிக்க (Onsite Compost) கட்டிடம் கட்டுவதற்கு ஆகும் மதிப்பீடு ரூ.4,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். /2018/அ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 374** **நாள் 24.08.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 18

இந்நகராட்சி பொதுபிரிவில் இயங்கி வரும் TN50 U 0518 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு 26.09.2018 உடன் தகுதிச்சான்று முடிவடைவதால் வாகனத்திற்கு கீழ்கண்ட பழுதுகள் சரி செய்யப்பட வேண்டும் என திரு.உ.சந்திரசேகர் ஓட்டுநர் 23.08.2018ந் தேதிய விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்.

1. சர்வீஸ் செய்து கிரீஸ் பேக் செய்யவும்
2. நான்கு வீல் பிரேக் பேரிங் பேக் செய்யவும்
3. கியர் சிப்ட் ராடு அசெம்பிளி மாற்றவும்
4. செல்ப் மோட்டார் டைனமோ சரிபார்க்கவும்
5. இன்சின் ஆயில், ஆயில் பில்டர் மாற்றவும்
6. டீசல் பில்டர் மாற்றவும்
7. ஸ்டேரிங் பாக்ஸ் சரிபார்க்கவும்
8. பெயின்டிங் செய்து பெயர் எழுதி ஆய்வுச்சான்று பெற்று தரவும்

மேற்கண்ட பழுதுகள் சரி செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண். 329 /2018/எச்1)

நகர் மன்ற தீர்மானம் எண் :- 375 நாள் 24.08.2018
அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது

ஒம் / திரு. சோ.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை
தனி அலுவலர் / ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி